

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.10.2024) தலைமைச் செயலகத்தில் இந்திய தொழிற் கூட்டமைப்பின் (CII) தென்னிந்திய தலைவர் திருமதி நந்தினி ரங்கசாமி சந்தித்து பேசினார். இச்சந்திப்பின் போது, இந்திய தொழிற் கூட்டமைப்பின் தமிழ்நாடு தலைவர் ஸ்ரீவத்ஸ்ராம், தமிழ்நாடு துணைத்தலைவர் ஏ.ஆர்.உன்னிகிருஷ்ணன் உள்பட இந்திய தொழிற் கூட்டமைப்பின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.10.2024) தலைமைச் செயலகத்தில் டி.வி.எஸ். நிறுவனத்தின் தலைவர் வேணு சீனிவாசன் தனது மனைவி மல்லிகா சீனிவாசனுடன் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.10.2024) தலைமைச் செயலகத்தில் சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டுத் தூதர் டக்காஹாஷி முனியோ (Thiru.Takahashi Muneo) அவர்கள் சந்தித்து பேசினார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மற்றும் சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டுத் தூதரக அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பணியின்போது உயிரிழந்த

# அரசுப் பேருந்து நடத்துநரின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 26 -

பணியின்போது உயிரிழந்த அரசுப் பேருந்துநடத்துநரின்குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் ரூ. 10 லட்சம் நிதியுதவி குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்த அவரது அறிவிப்பு வருமாறு:

சென்னை வியாசர்பாடி பணிமனை பேருந்து எண். VYJ 1399, மகாகவி பாரதியார் நகரிலிருந்து கோயம்பேடு பேருந்து நிலையம் நோக்கி சென்று கொண்டிருந்த மாநகரப் பேருந்தில் நடத்துநராகப் பணியாற்றிவந்த திரு. ஜெ.ஜெகன் குமார் (பணி எண். C52200) பயணி ஒருவருடன் ஏற்பட்ட வாய்தகராறின் போது அப்பயணி தாக்கியதில் பலத்த காயம் ஏற்பட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் 24.10.2024 இரவு உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியறிந்து மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

உயிரிழந்த அரசு மாநகரப் பேருந்து நடத்துநர் ஜெ.ஜெகன் குமார் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் பணியாளர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த நடத்துநர் ஜி.ஜெகன்குமார் அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் பத்து இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### சாலை விபத்தில் உயிரிழந்த – வீரவநல்லூர்

# காவல் நிலைய உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 26 -

சாலை விபத்தில் உயிரிழந்த திருநெல்வேலிமாவட்டம், வீரவநல்லூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் ரூ.25 லட்சம் நிதியுதவி குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் காவல் நிலையத்தில் உதவிஆய்வாளராகப்பணிபுரிந்துவந்த சுப்பையா (வயது 57) என்பவர் கடந்த 21.10.2024 அன்று பணி முடிந்து இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக தவறி விழுந்து காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று (25.10.2024) உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

காவல் உதவி ஆய்வாளர் சுப்பையா அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல் துறைக்கும் அவரது குடும்பத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

காவல் உதவி ஆய்வாளர் சுப்பையா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும்காவல்துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### அக். 27 – ஞாயிற்றுக்கிழமை அன்று

# அனைத்து நியாயவிலைக் கடைகளும் செயல்படும்!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

*சென்னை, அக். 26 -*

*முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அனைத்து நியாயவிலைக் கடைகளும் நாளை (27.10.2024 - ஞாயிற்றுக்கிழமை) செயல்படும் என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.*



*இது குறித்து அவர் நேற்று முன்தினம் (24.10.2024) வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி பொதுமக்கள் அனைவரும் தீபாவளிப் பண்டிகையினை சிறப்பாக கொண்டாடும் வகையில் தமிழ்நாட்டில் அனைத்து துறைகளின் சார்பில் பல்வேறு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*அதன்படி, கூட்டுறவுத் துறையின் மூலம் தமிழ்நாடு முழுவதும் செயல்படும் 24,610 முழு நேர நியாய விலைக்கடைகள். 10,164 பகுதி நேர நியாய விலைக்கடைகள் என மொத்தம் 34,774 நியாய விலைக்கடைகளில் குடிமைப் பொருட்களைப் பெற்று தீபாவளிப் பண்டிகையினை பொதுமக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் அனைத்து முழு நேர மற்றும் பகுதி நேர நியாயவிலைக் கடைகளும் நாளை (27.10.2024 - ஞாயிற்றுக்கிழமை) முழுவதுமாக வழக்கம்போல் செயல்படும்.*

*இவ்வாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.*

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட, மாநில, மாநகர, அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநில, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 9.11.2024 - சனிக்கிழமை, காலை 9.00 மணியளவில், கரூர், கோவை ரோடு, டான்சி அருகில் உள்ள “பிரேம் மகாலில்” எனது தலைமையில்,

கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும் - மின்துறை அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி மற்றும் மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி - இணைச் செயலாளர்கள் சி.ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

அதுபோது மாவட்ட, மாநில, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1) துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள்;

2) “தமிழ் மாணவர் மன்ற” - அமைப்பினை ஏற்படுத்தி, அதில் உறுப்பினராக சேர்த்த படிவங்களை ஒப்படைத்தல் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.10.2024

**சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (24.10.2024) சென்னை கலைவாணர் அரங்கக் கூட்டரங்கில் கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ப.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பெ.அன்புசோழன், (மக்கள் தொடர்பு) ச.செல்வராஜ், (செய்தி) மற்றும் செய்தித் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வக்பு வாரிய மசோதா:

# நாடாளுமன்ற கூட்டுக் குழுத் தலைவர் அவசர கதியில் செயல்படுகிறார்!

## ஆ.இராசா எம்.பி. குற்றச்சாட்டு!

*புதுடில்லி, அக். 26 -*

*வக்பு வாரிய மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு தலைவர் அவசரகதியில் செயல்படுவதாக தி.மு.க. துணைப்பொதுச்செயலாளரும் மக்களவை உறுப்பினரும், நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் உறுப்பினருமாகிய ஆ.ராசா குற்றம் சாட்டினார்.*

**பாட்டில் வீச்சு**

*நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை ஆய்வு செய்ய பா.ஜனதா நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதாம்பிகா பால் தலைமையில் நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.*

*கடந்த 22.10.2024 அன்று அக்குழு வின் கூட்டம் நடந்தபோது, குழுவில் இடம் பெற்றுள்ள திரிணாமுல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கல்யாண் பானர்ஜி, கண்ணாடியால் ஆன தண்ணீர் பாட்டிலை உடைத்து தலைவரின் இருக்கை நோக்கி வீசினார். இது தொடர்பாக ஜெகதாம்பிகா பால் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.*

*இந்நிலையில், நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் மற்றொரு உறுப்பினரான தி.மு.க. மக்களவை உறுப்பினர் ஆ.ராசா, தனது சமூக வலைதள பக்கத்தில் இது பற்றி கருத்து தெரிவித்துள்ளார்.*

*அவர் கூறியிருப்பதாவது:*

**நீதி கிடைக்காது என்று சந்தேகம்**



*நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணைகள் ரகசியமானவை என்றும், அவற்றை வெளியே சொல்லக்கூடாது என்றும் குழுவின் தலைவருக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருந்தும், விதிகளை மீறி, அவர் கூட்ட நிகழ்வுகள் குறித்து பேட்டி அளித்தது கெட்ட வாய்ப்பானது. கூட்டத்தில் நடந்த அசம்பாவித சம்பவத்தையும் மீறி, குழு தலைவர் அவசரகதியில் கூட்டத்தை நடத்தி வருகிறார். அதனால், நீதி கிடைக்காதோ என்ற சந்தேகம், குழு உறுப்பினர்களிடமும், பொதுமக்களிடமும் எழுந்துள்ளது.*

*இந்த தடைகளையும் மீறி, நமது ஜனநாயக, மதச்சார்பற்ற மாண்புகளை கட்டிக் காக்க போராடுவோம்.*

*இவ்வாறு அவர் கூறியுள்ளார்.*

### காரைக்குடியில்

# ரூ.323 கோடியில் மினி டைடல் பார்க்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நேரில் ஆய்வு!

*சிவகங்கை, அக். 26 -*

*சிவகங்கை மாவட்டம் திருச்சி காரைக்குடி சாலையில் மினி டைட்டில் பார்க் அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் தளபதி அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார். ரூபாய் 323 கோடியில் இந்த மினி டைடல் பார்க் அமைக்கப்பட்டு வருகிறது. 5ஏக்கர் நிலப்பரப்பளவில் 50,000 சதுர அடியில் இரண்டு தரைத் தளம், மற்றும் 2 தளங்களுடன் மினி டைடல் பார்க் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.*

*இந்த பணிகளை தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அங்கு நடைபெறும் பணிகளின் விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். பணிகளை விரைவாக குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.*

*அமைச்சருடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மாநகர மேயர் எஸ். முத்துதுரை, துணை மேயர் என். குணசேகரன், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. வட்டாட்சியர் ராஜா, சாக்கோட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் சுப. சின்னத்துரை, டைட்டல் பார்க் செயற்பொறியாளர் பாலாஜி, உதவி பொறியாளர் கோபி கார்த்தி, டீம் லீடர் சுவாமிநாதன், ஒப்பந்தக்காரர் திலக் பாலகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் கலாகாசிநாதன் ஆகியோர் சென்றிருந்தார்கள்.*

# மேட்டூர் அணை நீர்மட்டம் 101 அடியாக உயர்வு!

*மேட்டூர், அக். 26 -*

*தமிழ்நாடு, கர்நாடகா காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக கடந்த சில நாட்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது.*

*இதன் காரணமாக அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 101.40 அடியாக உயர்ந்து காணப்பட்டது.*

*அணைக்கு 29 ஆயிரத்து 307 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது.*

*அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு 7500 கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 600 கன அடியும் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் 66.66 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.*

### முரசொலி பிழை திருத்துநர் பிரிவில் பணியாற்றும்

# தி.சுபாராணி தந்தை பி.ஜெயராமன் மறைவு!

*மதுரை, அக்.26-*

*முரசொலி பிழை திருத்துநர் பிரிவில் பணியாற்றும் தி.சுபாராணியின் தந்தை பி.ஜெயராமன் அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*முரசொலி பிழை திருத்துநர் பிரிவில் பணியாற்றும் தி.சுபாராணியின் தந்தை பி.ஜெயராமன் அவர்கள் (வயது 73) 22.10.2024 - செவ்வாய்க்கிழமை அன்று உடல்நலக் குறைவால் மதுரையில் மறைவெய்தினார்.*



*அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 23.10.2024 அழகர் நகர், சிந்தாமணி ரோடு, மதுரையில் நடைபெற்றது.*

*மறைவெய்திய பி.ஜெயராமனுக்கு விஜயலட்சுமி என்ற மனைவியும், பாண்டிச்செல்வி - (ரவிச்சந்திரன்), சுபாராணி - (தியாகராஜன்), தீபா ராணி - (சத்தீஷ்குமார்) ஆகிய மகள்களும், பாண்டியராஜன் - (ஜோதி) என்ற மகனும் உள்ளனர்.*

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** தம்பி....! ஒன்றிய பா.ஜ.க. அரசின் அமலாக்கத்துறை வைத்திலிங்கத்தின் மீதும், எடப்பாடியின் நண்பர் இளங்கோவன் மீதும் பாய்ந்திருக்கிறதே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா, பா.ஜ.க.வுக்குப் புதிய கூட்டாளிகளைச் சேர்ப்பதில் அமலாக்கத்துறை இறங்கி இருக்கிறதோ என்ற அய்யப்பாடு சிலருக்கு ஏற்பட்டுள்ளது.**

**இடிக்க வேண்டியதை இடித்தால், நடக்க நினைப்பது நடக்கும் என்ற நம்பிக்கையோ என்னவோ ?**